மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.41/2017

வாக்குமூலம்.. வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணியன் | ஜாதி | |
| த/பெ. | நல்லமுத்து<br>கிருஷ்ணப்பிள்ளை | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 58/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 30-01-2023 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

## முதல் விசாரணை

நான் தாவா வழக்கில் வாதி/வாதி தரப்பில் 1 வது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 18.11.2010 ம் தேதி 1ம் பிரதிவாதி லெட்சுமணனுக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட இனாம்சாசனம் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி லெட்சுமணன் எனக்கு 05.05.2011-ம் தேதி எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.01.2013-ம் தேதி நான் எனது வழக்கறிஞர் மூலம் லெட்சுமணன் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.08.2013-ம் தேதி 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை 1, 2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் எண்ணிக்கை 2 தாக்கல் செய்கிறேன். அது வரிசை 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.08.2013-ம் தேதிய இனாம் செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.மேற்கண்ட ஆவணம் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்காமல் வாதி தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யமுடியாது என்ற ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.08.2013-ம் தேதி அன்று என் பெயருக்கு 2ம் பிரதிவாதி எழுதிவைத்த கிரைய பத்திரத்தின் அசல் மற்றொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பில் அசல் ஆவணம் எங்கு உள்ளது என்பது பற்றி நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடாமல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யமுடியாது என்ற ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.04.2014-ம் தேதிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை +W.P.(MD) No.18380 OF 2013 உத்தரவு சான்றிட்ட நகல்

தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.05.2016-ம் தேதி 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிவைத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் பிரதிவாதிகள் தரப்பில் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டி நடவடிக்கை எடுக்கவேண்டி சான்றிட்ட நகல் வாதி தரப்பில் குறியீடு செய்யமுடியாது என்ற ஆட்சேபணையுடன் அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**